தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2040, ஆனி 22

2009 ஜுலை 6, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

இந்த உலகமானது, நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்து விட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.

1. இரங்கல் தீர்மானம்

உறுப்பினர் திரு. து. செல்வராஜ் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையில் உறுப்பினராகப் பணியாற்றியவரும், காங்கிரஸ் பேரியக்கத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவரும், இனிய பண்பும், செயல்திறனும் கொண்டவரும், அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் பண்பால் அனைவரது பாராட்டுதலைப் பெற்றவரும், சட்டமன்றத்தில் உரையாற்றுகின்ற நேரத்தில் கண்ணியம் சிறிதுகூடக் கெடாத நிலையில் பேசும் நற்பண்பு வாய்ந்தவரும், தனது தொகுதி மக்களுக்குத் தொண்டு செய்வதில் மிகுந்த அக்கறை காட்டியவரும், சமூக சேவையிலும், கல்வித் தொண்டிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சீரிய முறையில் பணியாற்றியவருமான திரு. து. செல்வராஜ் அவர்கள் 5–7–2009 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

11-123-2

[பேரவைத் தலைவர்] [2009 ஜூலை 6

அவரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், அவரது கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும் மறைந்த உறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் நாளை (7–7–2009) செவ்வாய்க்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 9–32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

---

2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

57. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்கள்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறையின் 31–3–2009 ஆம் நாளிட்ட 13 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

79. மானியக் கோரிக்கை எண் 29 – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

80. மானியக் கோரிக்கை எண் 29 – சுற்றுலா (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

81. மானியக் கோரிக்கை எண் 11 – முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

82. மானியக் கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

83. மானியக் கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

84. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை. (2008–2009)

85. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து நான்காவது அறிக்கை. (2008–2009)

86. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எட்டாவது அறிக்கை. (2008–2009)

---

2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

57. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்கள்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறையின் 31–3–2009 ஆம் நாளிட்ட 13 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

79. மானியக் கோரிக்கை எண் 29 – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

80. மானியக் கோரிக்கை எண் 29 – சுற்றுலா (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

81. மானியக் கோரிக்கை எண் 11 – முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

82. மானியக் கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

83. மானியக் கோரிக்கை எண் 30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

84. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை. (2008–2009)

85. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து நான்காவது அறிக்கை. (2008–2009)

86. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எட்டாவது அறிக்கை. (2008–2009)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS